(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO.276/2020
**Depostitions of PW- 5 Witness for**

| | |
|---|---|
| Name | திரு. கனகராஜ், சார்பு ஆய்வாளர் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of March 2024.

Signature of Witness.

13.03.2024

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை–

நான் தற்போது கிருஷ்ணன்கோவில் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக கடந்த 25.11.2019 ம் தேதி 12.00 மணிக்கு நிலையப்பொறுப்பில் இருந்தபோது கோவில்பட்டி கடலையூரை சேர்ந்த ஜசக்ராஜதுரை மனைவி பொற்செல்வி என்பர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 549/2019 இதச பிரிவு –379 ன் கீழ் வழக்குபதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் மனுவினையும் இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு

அனுப்பி வைத்தேன். மற்றொரு நகலை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அதில் ஒரு நகலை புலன் விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

இந்த வழக்கில் குற்றம் நடந்த நாள் 10.11.2019 என்றால் சரிதான். காவல் நிலையத்தில் 25.11.2019 ம் தேதி மதியம் 12.00 மணிக்கு புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின்பு 15 நாட்கள் கழித்துதான் புகார் கொடுக்கப்பட்டுள்ளதென்றால் சரிதான். புகார் எழுதிதான்கொண்டு வந்தார். யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. நகை காணவில்லை என்று சொல்லிதான் புகார் கொடுக்கப்பட்டுள்ளதென்றால் சரிதான். புகார்மனுவினை பெற்று நான் நேரடியாக 379 இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரிதான். கு.வி.மு.ச. பிரிவு 41 D ன் கீழ் நான் வழக்கு பதிவு செய்யவில்லை. 25.11.2019 அன்று நான் எத்தனை வழக்குகள் பதிவுசெய்தேன் என்றால் இரண்டு வழக்குகள் பதிவு செய்தேன். புலன் விசாரணைக்கு நான் உதவி செய்யவில்லை. நான் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை மட்டும் பதிவு செய்தேன். திருவிழா காலங்களில் பேருந்து நிலையத்தில் போலீசார் ரோந்து பணியில் இருப்பார்கள் என்றால் சரிதான். புகார்தாரர் 1 கிராம் எடையுள்ள ஆர்டின் மாடல் தங்க டாலர் மற்றும் 2 பவுன் எடையுள்ள தங்க முறுக்கு செயின் ஆகியவை திருடிச்சென்றுவிட்டதாக புகார் கொடுத்துள்ளார். முதல் தகவல் அறிக்கையை மறுநாள் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். காவல் நிலையத்தில் இருந்து 10 நிமிடத்தில் நீதிமன்றத்திற்கு வந்துவிடலாமா என்றால் சரிதான். தாமதமாக நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை கிடைக்கப்பெற்றதற்கு சிறப்பான காரணம் ஒன்றும் இல்லை. நான் சொன்ன நான் சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லைஎன்றால் சரியல்ல. திருடிய நபர் குறித்த அடையாளம் புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான்.